தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை | 3—1—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 29



மாலை நேரம், கதிரவன் தன் கிரணங்களைத் தன்னிடத்தே ஒடுக்கிக் கொண்டு கடமையைச் செய்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் மேலைக் கடலில் மறைகின்றான். பறவைகளெல்லாம் பலவிதமான ஒலிகளை யெழுப்பி தங்கள் தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்து செல்கின்றன. படகில் ஏறி மீன் பிடிக்கக் கடலில் சென்ற செம்படவர்கள் பொழுது சாய்ந்துவிட்டதனால் அவசரம் அவசரமாகக் கரையை நோக்கி வருகின்றனர்.

இந்த நேரத்தில் தான் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்று மலை, காடு, கடல் முதலியவைகளைக் கடந்து அயல்நாடு சென்று வெற்றியோடு திரும்பி வந்த தலைவனுக்கு இவ்வளவு நாள் பிரிந்திருந்த தலைவியைக் காண வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. காண வேண்டுமென்ற ஆவல் ஒரு பக்கம் இருந்தாலும், பிரிந்து செல்லச் சிறிதும் சம்மதமளிக்காத தலைவியின் அன்பு மொழிகளையும் மீறிச் சென்ற பின், திரும்பவும் அவள் காணின் சினமடைவாளோ? என்ற எண்ணமும் உடன் தோன்றியது. எப்படியாயினும் அவளைச் சென்று காண்பதுவே நல்லது என எண்ணினான் தலைவன். எண்ணியவாறே தலைவியைக் காணவும் புறப்பட்டான்.

உள்ளத்தை முதலிலேயே தலைவியிடம் விட்டுவிட்ட தலைவன் உடலோடுமட்டும் தனியே செல்வதுபோலச் சென்றான். கண்கள் எதிரே காண்பவைகளை நோக்கவில்லை. செவிகள் ஊராரின் மொழிகளைக் கேட்கவில்லை. கால்கள் மட்டும் இரவிலும் பகலிலும் நடந்து நடந்து பழக்கமானதால் தாமே அவள் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. மெள்ள மெள்ள நடந்தான். தலைவியின் வீட்டையும் அடைந்து விட்டான்.

தலைவி இப்பொழுது நம்மை நினைப்பாளோ? அல்லது இனி நாம் வாரோம் என எண்ணி உள்ளம் மிக வருந்தி, மெலிந்து வாடுகின்றாளோ? அல்லது இவள் பிரிவுத் துன்பம் தாங்காதவளாய் மெலிய, தாய் முதலானோர் கண்டு இடித்துப் பேச "நம் தலைவர் ஏன் பிரிந்து சென்றார் நான் வருந்த?" என்று வாடி வருந்திக் கொண்டிருக்கிறாளோ? என பலவாறு எண்ணி வாயிலைக்கடந்து ஓரடி எடுத்து வைத்தான். வைத்ததுதான் தாமதம் 'யாரங்கே' என்ற ஒலி கேட்டு ஒலி வந்த பக்கம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பெண்ணணங்கு ஒருத்தியைக் கண்டான். தலைவியோ, எனச் சந்தேகித்து அப்பக்கம் 'நான்தான்' எனக் கூறி அருகில்சென்றான். பாவம்! தலைவி என்று நினைத்திருந்த தலைவனுக்கு அவள் இல்லையென்று தெரிந்ததும், வருத்தம் அவனை வருத்தியது. ஆயினும் ஒருவாறு பயத்தினின்றும், நீங்கி தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு 'நீ யார்?' என்ற வினாவை விடுத்தான்.

பூனைபோல பதுங்கிப்பதுங்கி வருகின்றவரைக் கண்டதும் தலைவராகத்தான் இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டாள் அப்பெண். அப்பெண் யாருமில்லை; தலைவியின் தோழியேதான். தலைவர் இவ்வாறு வருவது பல முறை இவள் பார்த்ததாயிற்றே! அதனால், தலைவர் என்று அறிந்து கொள்ள வெகுநேரமாகவில்லை. இருந்தாலும் அவரை எப்படியாவது பதில் சொல்ல முடியாதவாறு திண்டாடச் செய்ய வேண்டுமென்பது தோழியின் எண்ணம் எனவே, தலைவனின் 'நீ யார்?' - கேள்விக்கு விறைப்பாக 'நான் ஒரு பெண்' என்றாள். தலைவன் தோழியையும் மதியாதவன்போல "இவ்வீட்டில் தலைவி இருக்கின்றாளா?" என்று கேட்டான். கேட்டு நிறுத்தினான். 'நான் தான் தோழி, எமது தலைவியை இப்பொழுதுதான் நினைத்து வந்தீரோ' என்று தொடங்கிச் சொல்ல ஆரம்பித்து விட்டாள் தோழி தன் கதையை.

"நின்னுடைய வருத்தத்தைத் தீர்க்க வேண்டுமென்று கருதி தலைவி நின்னிடத்தே வந்து தீர்த்த நிலையைச் சிறிதும் அறியாத தலைவனே! நீ இவளை விட்டுப் பிரிந்ததும் அவளது கண்கள் கண்ணீரைச் சொரிந்து, சொரிந்து நீர் வற்றிப் போயிற்று. உன்னை யடைந்ததின் காரணமாக மகிழ்ச்சியால் விம்மிப் பருத்து அணிகள் கழலாதவாறு தோள்கள் உறுதியாகப் பிடித்துக்கொண்டிருந்தன. பிரிந்ததால் தோள்கள், அணிகள் தாமே கழன்று விழுமாறு மிக மெலிந்து போயின. நின் வருகையினால் ஒளிவிட்டு விளங்கிய நெற்றி நீ பிரிந்ததால் ஒளியிழந்து, பசப்பு பரந்து, மூடிக்கொள்ள, வாடிய நிலையில் தோற்றமளிக்கிறது. இவ்வாறெல்லாம் தலைவி வருத்தத்தில் மூழ்கிக் கலங்க நீ பிரிந்து சென்றது என்ன காரணத்தைக் கொண்டு? உன்னுடைய மனம் நடுங்கும்படியாக உண்டான காமநோயைத் தீர்க்கச் சுறா மீன் முதலியவற்றைக் கொண்ட கொடிய கழிகள் சூழ்ந்த மலைபோல உயர்ந்த, வெண்மையான மணற்குவியலிடத்து நீ குறித்த இடத்தில் தலைவி தவறாமல் வந்தாள் என்ற காரணத்தினாலா? அல்லது கடற்கரையிலே நின்னுடைய தேர் இன்ன நேரத்தில் வரும் என்ற குறிப்பில்லாமல் பல நாளும் நீ வருவதை முன்னாலேயே மனத்தால் அறிந்து உன்னை வரவேற்று எதிர்கொண்டாள் என்ற காரணத்தினாலா? அல்லது, இந்தப் பனித்துறையிலே நடுயாமத்தே நீ வந்து செய்த நின் வரவைக் காட்டும் குறிப்பிற்குத் தவறாமல் வந்தாள் என்ற காரணத்தினாலா? நீ இவளைப் பிரிந்து சென்றதுதான் என்ன காரணத்தினால்? இவள் உனக்கு இதுவரை செய்து வந்த நன்றியை மறந்து சென்றாய்; அதனால் உனக்கு செய்நன்றி மறந்ததனால் உண்டான துன்பம் அவசியம் வந்தே தீரும்.

— 3-ம் பக்கம் —

உள்ளே: திருக்குறள் புது உரை

திருக்குறள் புது உரை

எம். சோமசுந்தரம், பி. ஏ., எல். டி., முன்னைத் தலைமை ஆசிரியர்,
உறுப்பினர்: ஆர்.பி.எ. மன்றம், லண்டன்மாநகர்.

இயல்புடைய மூவர்

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

10. நிற்க, வள்ளுவர் துறவறத்தைக் கொள்ளவேண்டுமென்று எண்ணுவதாகவும் தெரியவில்லை; வேண்டாமென்று எண்ணியுளாரென்பதற்கு ஆதாரங்கள் பல உள; "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" யென்றும் "அறத்தாற்றினில் வாழ்க்கையாற்றிற், புறத்தாற்றிற்போய்ப் பெறுவதெவன்" என்று கூறியவாற்றுலும் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று தீட்டிய வகையாலும் துறவறம் போற்றப்படவில்லை யென்பது பெற்றும்: மேலும் துறவறவியலில், துறவிகளுக்குத் தகாதன இன்னின்னவென்று விரித்தோதியவர், அதனுற் பெறும் நன்மை யின்னதெனக் காட்டவேயில்லை; விளக்கினரில்லை; ஆதலால், துறவறம் தமிழ்நாட்டாருக்கு வலியுறுத்தப்படவில்லை யென்பது தெளிவு. அது ஆரியர் கொள்கையாமாதலின் அது தமிழருக்கு உடன்பாடல்ல வென்பதைஎண்ணிக் காட்டியுளர். "மழித்தலும் நீட்டலும் வேண்டா" "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றனுயிர் செகுத்துண்ணாமை நன்று" "நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்கொல்லாமை சூழ்வான் தலை" என்று எழுந்த குறட்பாக்களாலும் அந்நாள் பிராமணர், புத்தர், அமணர் ஆதரித்த துறவற நிலையை வள்ளுவர் கொண்டாரில்லை யென்பது மலையிலக்கு.

11. ஆகவே, பரிமேலழகர் பயின்ற கருத்துப் பிழைபாடுடையதென்பது தெளிதல் கூடும். அவர் 'இயல்பு' என்ற அடைமொழியின் பொருளைச் சிந்தித்தாரில்லை. இச்சொல் இயற்கை நிலை யொன்றைக் குறிக்கும். இயல்பு நிலையாவது, விரும்பினும் விரும்பாவிடினும் எழுகின்ற நிலையாகும். ஆரியர் வகுத்த ஆசிரம நிலை இயல்புத் தன்மை பெறுது. மனிதன் தன்னுடைய நன்மைக்காகத் தானே எண்ணி நிறுவிய நிலையாகும். அவ்வாறெனின் வள்ளுவர் கொண்ட இயல்புநிலையாது? என்ற வினு எழும்; விடை கூறுதும்.

12. 'இயல்புடைய மூவர்' அந்தணர், அரசர், வணிகரே யாதல் வேண்டும். மக்களின் இப்பிரிவு தமிழகத்துப்பிரிவு. ஒழுக்கத்தாற் சிறந்து, மக்களுக்கு நன்மை தீமைகளை எடுத்துப் போதிக்கும் அந்தணர் நிலையும், நாட்டுக் குடிகளையும் நாட்டையும் தீயோர், கள்வர், பிற வேந்தர் முதலாயரிடமிருந்து காப்பாற்றுங் கடமையைக்கொண்ட அரசர் நிலையும், இல்வாழ்வான் (உழவன், வேளாளன) விளைவித்த பொருளை அப்பொருள் இல்லாதவர்கள், அதைப் பெற்று வாழ்க்கை நடத்தும் பொருட்டுப் பிறர்பால் கொண்டு விற்கும் வணிகர் நிலையும், மாந்தர் வாழ்க்கையில் இயல்பாக எழ வேண்டிய நிலைகளாகும்.

13. இதன்மேல், இவ்வில்வாழ்வான் இம்மூவர்க்கும் நல்லாற்றில் நின்றதுணை எவ்வாறென்பதை ஆராய்வாம். மற்றொரு வினுவும் இங்கு எழுதல் கூடும். துறவோரெனப்படும் அந்தணரை ஒருபால் ஒதுக்கினும், அரசரையும், வணிகரையும் இல்வாழ்வான் என்று சொல்லலாமே வென்பது எழும். ஆம்! எழும். அதற்கும் விடையளிப்பாம். இங்கு கொண்ட இல்வாழ்வான் உழவுத் தொழிலையே சிறப்பாக உடையவன். உழவுத் தொழிலை நன்கு நடத்திப் போதிய உணவுப் பொருளை விளைத்தலே அவனது பெருங்கடமை. அவ்வழி, அவன், அரசர், வணிகர், நிலையினின்று வேறுபாடுடையான் என்பது தோன்றும்; ஆனது பற்றித்தான் "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு" என்று வரையறுத்தார். அத்தொழிலே நாட்டின் வளப்பத்திற்கும், செல்வத்திற்கும், எல்லா மக்களின் இனிய வாழ்விற்கும் அடிப்படையாய் நின்றது, நிற்பது.

14. இதன் அசைவிலாப் பெருமையை 'உழவு' என்ற அதிகாரம் உறுதிப்படுத்துகிறது. அது தலைசிறந்த தொழில் என்பதை விளக்கும் பொருட்டு.

"உழவு உலகத்தார்க்கு ஆணி"
"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்"
"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்
காண்பர் அலகுடை நீழலவர்."
"உழவினர் கைம்மடங்கினில்லை
விழைவதூஉம்
விட்டே மென்பார்க்கு நிலை."
"சுழன்று மேர்ப்பின்ன
துலகமதனுல்
உழந்து முழவே தலை"

என்று வியந்தோதிய பெருமொழியினின்று, உழவுத்தொழில் இல்லையேல், அந்தணர், அரசர், வணிகர் முதலியோரின் நிலைகுலையுமென்பது பெற்றும்.

15. திருவள்ளுவரன்றி, அவருக்குப் பின் தோன்றிய புலவர்களும் அவரியற்றிய நூல்களும் அக்கருத்தையே வலியுறுத்துகின்றனர். வேளாண்மை பூண்ட வேளாளர் குடியிருப்பைச் சான்றோர் பக்கமெனச் சங்க நூல் முழங்குகின்றது. கடலுண்மாய்ந்த இளம்பெரு வழுதிக்குரிய புறநானூற்றுச் செய்யுள் 182.

"தனக்கென முயலா நோன்றுட்
பிறர்க்கென முயலு
நருண்மையானே."

என்பது வணிக வேளாளனைக் குறிக்கும் என்றுர் இளம்பூரணர். ஔவைப்பிராட்டியாரும்:
"மேழிச் செல்வம் கோழைபடாது."
"தொழுதூண் சுவையின்
உழுதூண் விரும்பு"

என்றும் சிறப்பித்தார். வள்ளுவருக்கு ஆயிரம் ஆண்டிற்குப்பின் தோன்றிய கம்பரும் 'ஏரெழுபது' என்னும் நூலை இயற்றி எல்லாச் சிறப்பையும், பெருமையையும் உழவுத்தொழிலுக்கே தந்தார்.

"காப்பாரே வேளாளர்
எந்நாளுங்காண்"

என்று கூறியுள்ளதை அறியாதார் யார்?

"அந்தணர்க்கு வேதமுதலரசர்க்கு
வெற்றி முதல்
முந்திய சீர் வணிகருக்கு
முதலாய முதலுலகில்
வந்தவுயிர் தமக்கெல்லா
மருந்தாக வைத்தமுதல்
செந்தமிழ்க்கு முதலாய
திருவாளர் செய்முதலே"
"சீர்வளரு மறைவளருந்
திறல்வேந்தர் முடிவளரும்
பேர்வளரும் வணிகருக்குப்
பெருநிதிய மிகவளரும்
ஏர்வளருந் திருவளரும்
இசைவளருங் கடல் சூழ்ந்த
பார்வளருங் காராளர்
பயிர்வளருந் திறத்தாலே',

என்று பயிர்த் தொழிலையுடைய இல்லறத்தானைப் புகழ்வதை எண்ணிப் பாருங்கள். வள்ளுவர் இல்லறத்தான, யாவருக்கும் நல்லாற்றில் நின்ற துணையாவன் என்பதைப் பசுமரத்தாணிபோல் அறையலாம். கம்பர் பாடிய 'திருக்கை வழக்கம்' முழங்குவதைக் கேண்மின்!

"..................நீளுலகில்
ஆதுலர்க்குச்
செய்பொனளிக்குங்கை யாகமங்கள்
வேத புராணங்கள்
விரிக்குங்கை—நீதிநெறி
மானங் குலங்கல்வி
வண்மை யறிவுடைமை
தானந்தருமம் தழைக்குங்கை—
யான தமிழ்
கல்லார்க ளென்னுமற்
கற்றோர்க ளென்னுமற்
எல்லோரையுங் காத்திடேற்றுங்கை
—வல்லமைசேர்
மைமா முகிலுலகை
வாழ்விக்கு மேன்மை போற்,
மாமறையோர், மன்னர்
வணிகர் முதலாகத்
தாமலையாமற் கொடுத்துத்
தாங்குங்கை."

இவ்வாறு, வள்ளுவர் கருத்து இன்னதென அறிவதற்கு வேண்டிய ஆதாரங்கள் பல விருந்தும், பரிமேலழகர் காட்டிய குறுகிய கருத்து, வியப்பை யெழுப்புகின்றது. யாவர்க்கும் ஊன்றுகோலாய் நிற்க வேண்டிய இல்லறத்தானை, அந்நிய நாட்டிலிருந்து தமிழகத்தில் குடியூன்றிய மக்களில் ஒரு தினைப் பகுதியை எடுத்துக் காட்டியதென்? அறியாமையா? சூழ்ச்சியா? சூழ்ச்சியாயின், பரிமேலழகருடையதா? அல்லது அவர் பேரில் வேறொருவர் செய்ததா? படிப்போர் முடிவு செய்யட்டும்.

15. உழவின் பெருமையை, நாகரிகம் பொங்கி எழுகின்ற இந்நாள் நிலைக்கண் கொண்டு சிறிது நோக்குவோம். இக்காலத்தே பல இயந்திரங்களைக் கொண்டு பல்வேறு கைத்தொழிலின் வாயிலாக அளவற்ற செல்வத்தை யுண்டுபண்ணியும், கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக அரசாங்கம் "அதிக உணவுப் பொருளை விளை" என்ற கூக்குரலை எழுப்பி வருகின்றது. ஏன்? உழவு குன்றி உணவுப் பொருள் போதிய அளவு இல்லாது அருகிப் போனமையால் தான். பல்வேறு துறையில் நாட்டின் செல்வம் பெருகி என்? உணவுப்பொருள் அருகிப் பசிப்பிணியெழுந்து, மக்களை வருத்தத் தலைப்பட்டால், அரசு எங்கே, வாணிபம் எங்கே, அந்தணர் தாம் எங்கே? ஆரியர் விதிப்படி. உணவுப்பஞ்சம், வானப்பிரஸ்தனையும், சந்நியாசியையும் தொடாது; அதைப் பற்றி அவர்கள் கலங்கவேண்டியதில்லை. உணவுப்பஞ்சம் ஏற்பட்டு மக்களைத் துன்புறுத்திவிடுமோ என்ற கவலை அரசாங்கத்தாரை ஓயாது வாட்டி வருகின்றது. 1947 ஆகஸ்டு மீ 15உ முதல் நாடு சுதந்தரம் அடைந்து விட்டதென்று பறைசாற்றியும் உணவுப்பஞ்சம நீங்குவதாகத் தெரியவில்லை. சுதந்தரத்தினுல் யாது பயன்? சுதந்தரம் இல்லையென்றழுத நாட்களிலெல்லாம் இக்கவலை யேற்படவில்லையே! அரசு முறை வகுத்துக்கொண்டே போவதில் யாது பயன்? கரம்பாய்க் கிடக்கும் நிலங்களையெல்லாம் ஒரு சேனையைத் திரட்டி, உழவைப் பெருக்குவதற்குரிய திட்டத்தை வகுப்பது; அரசு திட்டத்தை வகுப்பதைவிட நன்று நன்று: பசிப்பிணி வராமற் தடுத்த பிறகு, அரசியல் திட்டத்தை நிறுவுவது சீரிய முறையாகும். பசி நோய் எழுந்துவிட்டால் மற்ற வலிமைகளெல்லாம், வாதங்களெல்லாம் பறந்து போய் விடும். 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்.' ஆகவே, அன்று ஈராயிரம் ஆண்டிற்குமுன் சித்தரித்த உழவின் பெருமை, தலைமைத்தன்மை, சிறப்பு முதலாய உண்மையை உணர்வதற்கு இக்காலமோ அமைதல் வேண்டும்! என்ன சிறுமை! அந்நாள் தமிழரின் நுண்ணறிவே நுண்ணறிவு. இனிமேலாயினும் தமிழன் நல்லுணர்ச்சி பெறுவானு?

16. இவ்வாறு, குன்றிடை விளக்கென, வழிகாட்டிகள் இருந்தும், இக்குறள் வெண்பாவிற்கு உரைகண்ட பரிமேலழகர், 'மூவர்' என்பது, பிரமசாரி, வானப்பிரஸ்தன் சந்நியாசி என்ற அந்நியக் கலையின் கொள்கையைக் குறிக்க எவ்வாறு துணிந்தனரோ? விளங்கவில்லை! மதியிழந்தனரா? மதிமயங்கினரா? 'கற்கக் கசடற' என்ற வள்ளுவர் வாக்கைக் கைவிட்டனரா? அல்லது 'நிற்க அதற்குத் தக, என்பதை நழுவவிட்டனரோ? எவ்வாறுயினும் இது தமிழ் நாட்டுக்கு, தமிழ்க்கலைக்கு, தமிழர்

— 7-ம் பக்கம் —

★ ★ ★

அவையுங் கூடத் தெரியும்

பெரிய நகரில் ஏழைகள் நிறைந்த பகுதியில் ஒரு பள்ளிக்கூடத்தில் புதிய மாணவன் ஒருவன் சேர்ந்தான். மாணவனுக்கு வீட்டிலே எத்தனை சகோதரர்கள், சூழ்நிலை என்ன, அப்பாவுக்கு என்ன வேலை என்றெல்லாம் கேள்விகள் கேட்ட ஒரு நமூனவை அவனிடம் கொடுத்துப் பதில் வாங்கிவரச் சொன்னுர்கள்.

பையன் அடுத்த நாள் ஒரு துண்டுக் காகிதத்தைக் கொண்டு வந்தான். அதில் இருந்த வாசகம் இது: "எங்களுக்குப் பதினெட்டுக் குழந்தைகள். என் புருஷர் கூழாய் ரிபேரும் தச்சு வேலையுங்கூடச் செய்வார்."

—'ப்ரீ இண்டியா'

★ ★ ★

எண்ணம்

மலர் 2 | 3-1-56 | இதழ் 29

மண்டலாதிபதி !

ஒரு சில எம். பி. க்கள் இட்லிக்கடை தேடிப் போய்க்கொண்டிருந்தாலும், கொஞ்ச நாட்களாக டில்லி பாராளுமன்றத்தில் அனல் வீசிக்கொண்டு தானிருக்கிறது. சுதந்தரம் பிறபபுரிமை என்ற சூருவளிப் பேச்சும்,கற்பை உவமைகாட்டிக் கனல் கக்தும காட்கிலின் வாதமும் தினசரி டில்லி திருநகரில் நடந்துகொண்டிருக்கிறது. பெற்றெடுத்த கொள்கையைகாலப்போக்கில்குழிவெட்டிப்புதைத்துவரும்காங்கிரசின் தலைமைப் பீடத்தை பண்டித ஜவகரின் எதிரிலேயே உறுப்பினர்கள் அறை கூவி அழைத்துப் பேசுவது நமக்குக் கேட்கிறது. மொழிவழி மாநிலச்சிக்கல், காங்கிரஸ் கேந்திரத்தையே குற்றக்கூண்டுக்கு இழுத்து வந்து விடுமோ என்று அவர்களே அஞ்சுகிற அளவுக்கு வளர்ந்துகொண்டு வருகிறது. தென்னாட்டிலே புயலடித்துக்கொண்டிருக்கையில் வடநாட்டிலே கொந்தளிப்பு ! சட்டங்களும், சர்க்கார் அவிழ்த்துவிட்ட அடக்குமுறைகளும் தவிடு பொடியாயின ! மயானமா ? மராட்டிய மாமண்டலமா ? என்று முடிவுகட்டுகிற வகையில் விந்தியத்திற்கப்பால் புயல் வீசிற்று. இத்தனை ரகளைக்களுககிடையேயும் பண்டிதநேரு 'இந்தியாவின் ஒற்றுமை, ஒற்றுமை'-என்று பேசிக்கொண்டிருக்கிருர். ஆதிக்கம் அழிந்துவிடாதிருக்க எதைப் பாதுகாக்க வேண்டுமென்று எண்ணி வருகிருரோ, அதிலேதான் தன் கவனமெல்லாம் இருக்கிறதே தவிர, கண்ணெதிரே நடைபெறும் குழப்பமென்ன, என்பது பற்றி நேருப் பண்டிதர் யோசித்ததாகவோ, அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகவோ தெரியவில்லை. மொழிவழி மாநிலப் பிரச்சினை குறித்துப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் வடக்கத்தி முகாம்களில் எதுவும் இந்தியாவின் ஒற்றுமையைக் குலைத்திடத் துணியவில்லை மொழிவழிப் பிரிவினையை வற்புறுத்திவிட்டு அடுத்தபடியாக இந்தியாவின் ஒற்றுமையைப் பற்றித்தான் அவர்களும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். வாதியின் வாக்குமூலத்தைப் புரிந்துகொள்ளாமலே வக்கீலும் வாதிடுகிருர். நீதிபதியும் மயங்கிச் சாகிருர் இப்படி ஒரு விசித்திர வழக்கு காங்கிரஸ் அரசாங்கத்தில் நடைபெறுகிறது தர்பார் நடத்துவோருக்குத் தொல்லை தரும் இந்த வழக்கை, வாதி நல்ல தீர்ப்பின் எல்லைக்கு இழுத்துக்கொண்டு போவதை அறிந்த ஆட்சிக்கேந்திரத்தின் அச்சாணிகளாக விளங்கும் காங்கிரஸ் செல்லப் பிள்ளைகள் வழக்கையே தள்ளுபடி செய்து விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிருர்கள். அந்தத் திடீர் ஏற்பாடுகளின் சிரசாகக் காணப்படுவதுதான் பண்டிதர்கூறும் மண்டலப்பிரிவினை யோசனையாகும்.

இந்தியப் பேரரசுக்குடையின் கீழிருக்கும் மாநிலங்களை ஐந்து அல்லது ஆறு பகுதிகளாகப் பிரித்து. ஒவ்வொரு பகுதியின் கீழும அந்தந்தப் பகுதியிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களை ஒன்ருககி அந்த ஒவ்வொரு இணைப்புக்கும் ஒரு ஆலோசனை சபையை ஏற்படுத்துவது; அந்த ஆலோசனை சபை மத்திய அரசோடு தொடர்பு கொண்டதாக இருக்கும்—பண்டிதர் வெளியிட்ட திடீர்யோசனை இதுதான்.

பண்டிதர் கருத்து என்பதற்காகப் பாராளுமன்றத்திலே கைதட்டலும் முழக்கமும் ஏற்பட்டதாம் கைதட்டி ஒலி கிளப்பியோரில் எத்தனையோ பேர் வெளியிலே வந்து மெய் வருந்திக் கண்கலங்கி நின்ருர்கள் என்றும் சொல்லப்படுகிறது. கட்சி என்ற ரீதியிலேயோ, கட்சித்தலைவர் என்ற முறையிலேயோ பார்க்காமல் பண்டிதர் வெளியிட்ட கருத்தை எடை போட்டால் பண்டிதருக்கு வலக்கரமாக விளங்கும் திரு. மேனன்கூட அந்தக் கருத்தை ஆதரிக்கமாட்டார் என்பது தெரியவரும்.

பண்டிதர் சொல்கிருர். அவ்வாறு நியமிக்கப்படும் ஆலோசனை சபை. பொதுவாக ஒரு கவர்னரை நியமித்துக்கொண்டு பணியாற்றுமாம். சின்ன சின்ன மாநிலங்களுக்கு வாய்த்த கவர்னரையே அந்தந்த மாநிலப் பிரதமர்கள் சமாளிக்கமுடியாமல் திணறிக்கொண்டிருக்கும் போது பெருப் பெரும மண்டலங்களை ஏற்படுத்தி, அதுவும் மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்ட மண்டலங்களை உண்டாக்கி அதற்கென நியமிக்கப்படும் கவர்னர்களிடம் சாதாரணப் பிரதமர்கள் எந்த மூலைக்கு ? பல மொழிகள் பேசும் மாநிலங்கள் ஒரு மண்டலத்திற்குள் கொண்டு வரப்பட்டால் மொழி, கலாச்சாரம். இவைகள் என்னுவது ? வெளிப்படையாகச்,சொன்னுல் பண்டிதரின் இந்த ஏற்பாடு; மொழிவழி மாநிலப் பிரிவினைக் கிளர்ச்சியைக் கொன்றுவிட்டு மத்திய சர்க்காரின் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்வதற்காக ஏகாதிபத்திய அடிப்படையில் தயாரித்த திட்டமாகும். மாநில அரசுகளிடம் இப்போதிருக்கிற உரிமைகளையும் பறித்துக்கொண்டு அவைகளை பொம்மை சர்க்கார்களாக்கிவிட நேருவின் மூளை இப்படிப்பட்ட யோசனையைப் பிறப்பித்திருக்கிறது. ரதத்திலே பூட்டியிருக்கும் ஒன்பது குதிரைகளை ஐந்தாக்கிவிட சாரதி நினைக்கிருன். ஏன் ? ஒன்பது கடிவாளங்களைக் கையிலே இறுகப் பிடித்துக்கொண்டு அவதிப்படுவதைக் காட்டிலும் ஐந்து கடிவாளங்களைப் பிடித்துக்கொள்வது சுலபம் என்று எண்ணித்தானே தவிர வேறு எதற்காக இருக்கும் ? ஜவகரின் யோசனையும், குதிரை குறைக்கும் சாரதியின் யோசனையைப் போன்றதுதான் மாநிலங்களை இணைத்து, மண்டலங்களை உருவாக்கி டில்லியை. மண்டலாதிபதியின் தலைமை-பீடமாக்கிவிட நினைக்கிறர். புத்தியுள்ளவர்கள். சிந்தனு சக்தியுள்ளவர்கள். தாயகத்தின்பால் நீங்காப்பற்றுக் கொண்டவர்கள் பண்டிதரின் இந்த யோசனையை ஏகேச்சாதிகார'மாளிகையின் நிலைப்படி என்றுதான் சொல்லுவர்

நாம் துணிந்து கூறுவோம், "எந்த சக்தி காங்கிரசிற்குத் துணை நின்று பணிபுரிந்ததோ அதே சக்தியை. நேருப் பண்டிதர் தன்னுடைய இந்த யோசனையின்மூலம் எதிர் சக்தியாக்கிக்கொள்ளநினைத்துவிட்டார்" என்று.

இந்த இதழ் எட்டே பக்கங்கள்.

தென்றல் போங்கல் மலர் வேலை சுறுசுறுப்பாக நடந்து கோண்டு வருகிறது. சிறிய அச்சு இயந்திரம். அதனுல் சாதாரண இதழையும், மலரையும் ஒன்ருக அச்சிடக் கஷ்டமேற்படுகிறது. இது போன்ற வசதிக் குறைவுகளை நண்பர்கள் போறுத்தருளுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனுல்...மலர் ஈடுகாட்ட முடியாத அற்புதப் படைப்பாக உருவாகிறது. மேலட்டை 'ஆப் சேட்' முறையில் அச்சிடப்படுகிறது. இயற்கை அழகு அதிலே சிரித்துக்கோண்டிருக்கிறது. பலரது கட்டுரைகளும் வந்து சேர்ந்துவிட்டன. 12-1-56-ம் தேதியன்றே மலர் கைக்குக் கிடைக்கும். 17-1-56ம் தேதிய சாதாரண இதழும் 'வேலங்குடித் திருவிழா'வோடு பன்னிரண்டு பக்கங்களாக வேளிவரும். மலரில் தோடர்கதை இல்லை.

மலரில்

கண்ணதாசன் எழுதும்

தலைவி	கட்டுரை
புவனமுழுதுடையாள்	நாடகம்
அகலிகை	கவிதை

விலை ரூபாய் ஒன்றுதான்.

திருமணம்...

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

அதனை நீ தீர்க்க வேண்டுமானுல் இவளுடைய தோளில் வளை கழன்ற வருத்தத்தையுடைய கோய் தீரும்படியாக எமது தலைவியை மணம் செய்துகொள். அதுதான்வழி" என மூச்சுவிடாமல் கூறி முடித்து நிறுத்தினுள் தோழி தான் எண்ணியது எண்ணியவாறே முடிந்துவிட்டது என்று அறிந்த தலைவன் "தலைவியை விரைவில் மணந்து கொள்வதே முறை. அவசியம் இதனை விரைவில் முடிப்பேன்" என உறுதி கூறிக்கொண்டு வந்த வழியே திரும்பினுன்.

—வித்வான் ச. சுந்தரேசன்

கண்ணதாசன்
பம்பாய்ப் பயணம்

பம்பாய், ஆமதாபாத் தி. மு. க. கிளைகளின் சார்பில் நடக்கவிருக்கும் போங்கல்விழா நிகழ்ச்சியில் கலந்து கோள்வதற்காக ஆசிரியர் கண்ணதாசன் 10-1-56 அன்று சேன்னையிலிருந்து கார் மூலம் புறப்படுகிருர்

தென்றல் இலக்கியப் போட்டி பாராட்டு விழா

8-1-56 ஞாயிறன்று

காரைக்குடியில்

கலைஞர் மு. கருணுநிதி

கலந்து கொள்வார்.

பொங்கல் மலர்கள்
பொங்கல் அன்று எல்லா இடங்களிலும் கிடைக்கும்
கலைமன்றம் கலை இலக்கிய மலர்...ரூ.2.
கலைஅரங்கம் சினிமா மலர்........ரூ.1
சிறுவர் மலர்..... அணா 8
உங்களுக்கு பிரதிகள் நிச்சயமாக கிடைக்க வேண்டுமானுல் உடனே உங்களின் விற்பனையாளர்களிடம் பதிவு செய்துகொள்ளுங்கள்
விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில் விற்பனையாளர்கள் தேவை.
ஸ்ரீமகள் கம்பெனி பத்திரிகைப் பகுதி
தபால் பெட்டி 275. சென்னை.1

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்—

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை,
எம். ஏ., எல். டி.

சிலப்பதிகாரம் ஒரு பல்வண்ணக் களஞ்சியம். காண்பவர் காட்சிக்கோணத்துக்கேற்ப அது பலவகையாகக் காட்சியளிக்கிறது. அதை இலக்கியக் கண்ணோட்டத்துடன் பார்ப்பவருக்கு அதனிலும் சிறந்த இலக்கியம் வேறு கிடையாது. மொழிநடையில் கருத்தூன்றுபவர்களுக்கு அது தமிழில் தமிழ்கலந்தால் போன்ற விழுமிய இழுமெனும் இன்னோசையுடைய தாய் இலங்குகின்றது. வரலாற்றுக் கண்ணுடன் பார்ப்பவர் அதில் தமிழகத்தின் வரலாறு மட்டுமன்றி தமிழகஞ் சூழ்ந்த நாடுகளின் பண்டை வரலாற்றுக் குறிப்புகளையும் காண்டல்கூடும். தமிழகப் பண்பாட்டை உணர விரும்புகிறவர்களுக்கு அது சங்க இலக்கியங்களைவிட முனைப்பாகப் பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டுச் சித்திரமாய் அமைகிறது.

காதல், வீரம் ஆகியவற்றின் ஓவியங்கள், பண்டைச் சமய வகைகள், பத்தினித்தெய்வ வழிபாடு ஆகியவை பலர் கவனங்களை ஈர்த்துள்ளன. அரசியல் தலைவர்களில் பலர் அதில் அரசியல் விளக்கமும் அரசியல் உணர்ச்சியும் பெறுகின்றனர். பெற்று,நாட்டு மக்களுக்கு ஊட்ட முனைகின்றனர். இசை, நாடகம் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கட்கு அது இசை நாடக நூலாகவே காட்சியளிக்கிறது. முத்தமிழ் நூல் என்ற வகையில் அது தமிழரின் அழிவுற்றுப்போன பண்டை இசைக்கலையின் பரப்புக்கும், நாடகக்கலையின் பரப்புக்கும் அழியாச் சான்றாய் அமைகிறது.

தமிழகத்துக்கு மட்டுமன்றித் தென்னாட்டடிப்படையிலும் உலக அடிப்படையிலும் அது நாடகக் கலையின் வளர்ச்சிகளை இணைத்துக் காட்டுகிறது என்பதையும் காண்கிறோம்.

இவ்வளவு சிறந்த நூல் தமிழகத்தில் நூற்றாண்டுக் கணக்காக இருட்டடிக்கப்பட்டிருப்பானேன் என்று வியப்படையாதிருக்க முடியவில்லை !

முரண்பாடுகளும் குறைபாடுகளும்

அது மட்டுமன்று. அது தரும் பல்வண்ணங்களிடையே பல்வேறு வண்ணங்களை மட்டும் நாம் காணவில்லை. ஒருவர் காணும் வண்ணங்களுக்கு முரண்பட்ட வண்ணங்களை இன்னொருவர் காண்கின்றார்.ஒருவருக்குக் கவர்ச்சி வண்ணமாகத் தோற்றுவது மற்றொருவருக்கு வெறுப்பு வண்ணமாகத் தோற்றுகிறது. மூன்றாவது ஒருவருக்கு இரு வகைகளும் ஒரே புறக்கணிப்பு வண்ணமாய்விடுகின்றன. ஒருவர் அதில் வரலாற்றைக் காணும்போது, மற்றொருவர் அதில் கட்டுக்கதையையே காண முடிகிறது. ஒருவர் அதில் ஆரியத்தைக் காணும்போது, ஒருவர் அதில் தமிழ்ப் பண்பைக் காண்கிறார்.

இன்னும் வியப்புக்குரிய செய்தி யாதெனில், ஒரே வண்ணம் காண்பவர்களிடையே, ஒருவருக்கு அது கவர்ச்சி வண்ணமாயிருக்கிறது. மற்றொருவருக்கு அது வெறுப்பு வண்ணமாய் விடுகிறது. இதுபோலவே, இரு வண்ணங்களைக் காண்பவர்களிடையே கவர்ச்சி, வெறுப்பு ஆகியவற்றில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்பட்டுவிடுகின்றன.

இத்தனைக்கும் காரணம் சிலப்பதிகாரத்தின் பல்வகைப் பெருக்க வண்ணம்தானா? கோளாறு முற்றிலும் நூலில் இல்லை. அதனைக் காணும் கோணத்திலும் இல்லை. என்பதை இறுதிச் செய்தி காட்டுகிறது. காண்பவர் உள்ளம் திறந்த உள்ளமாயிருந்தால், கருத்து வேற்றுமை ஏற்பட வழி இருக்கலாம். விருப்பு வெறுப்பு ஏற்பட வழி இருக்கலாம்.

அடிக்கடி ஒரே ஆசிரியர் முன்னுக்குப்பின் முரணாக, ஆனால் விருப்பு வெறுப்பில் ஒரே திசையில் செல்வது காண்கிறோம். இது கருத்து வேறுபாடன்று. ஒரே உணர்ச்சியின் இருவகைப்பட்ட சூழ்நிலை விளைவென்பது தெற்றென விளங்குகிறது.

சிலப்பதிகார ஆராய்ச்சியாளர்களிடையே, சிலப்பதிகாரத்துக்குரிய தமிழ் மக்கள் சமுதாயத்துக்குள்ளேயே ஏற்பட்டுள்ள இக்கோளாறு சிலப்பதிகாரத்தைப் பற்றியது மட்டுமல்ல. தமிழின் பல துறைகளிலும் அது பல வடிவில் நின்று செயலாற்றுகிறது. ஆகவே சிலப்பதிகாரத்தின் பயனை மட்டுமன்றி வருங்காலத் தமிழகத்தையும் மனத்தில் கொண்டு இதில் கருத்துச் செலுத்துவோம்.

போற்றும் சிலர்

"இப்பொழுது நம் காலத்தவர் சிலரால் சிலப்பதிகாரம் மிகுதியாகப் போற்றப்பட்டு வருகிறது. அதற்கு முக்கிய காரணம் தமிழிசையியக்கமே."

இந்த வாசகம், திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் 1946-ல் எழுதப்பட்டது. காலஞ்சென்ற திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் பதிப்பித்த புகார்க் காண்ட உரையின் முன்னுரையின் முதல்வாசகமே அது!

திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை தமிழிசை இயக்கத்தில் ஆர்வமுடையவரல்ல. ஆனால் அதை எதிர்ப்பவருமல்ல. சிலப்பதிகாரத்தைப் போற்றுவது தவறு என்று அவர் கூற முன்வந்தால், இந்த வாசகம் பொருளுள்ள வாசகம் ஆகும். ஏனெனில் தம் 'காலத்தவர் சிலரிடமிருந்து' இந்த ஒருவகையில் அவர் வேறுபட்ட வராதலால் அச்சிலரை அசட்டையாக ஒதுக்க இடமேற்பட்டிருக்கும். ஆனால் சிலப்பதிகாரத்தை அவர் புகழத் தவறவில்லை. அதனை வெளியிட்ட திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் மீதோ அவர் பதிப்பு மீதோ அவருக்குச் சிறிதும் வெறுப்புக் கிடையாது.

அடுத்து வரும் வாசகங்கள் இதைக் காட்டுகின்றன. சிலரால் போற்றப்படுவதற்குக் காரணமான தமிழிசை இயக்கத்தில் "முன்னணியில் நின்று அதற்கு ஊக்கம் அளித்தவர்களுள் ஒருவர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார். இவர்கள்...முதற் காண்டத்தை...எளிய உரையாக இப்போது பதிப்பித்து வெளியிட்டிருப்பது மிகப் பொருத்தம் என்றே கருதுகிறேன்."

திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் சிலம்பின் அழகில் ஈடுபடாதவரும் இல்லை. இதனை அவர் வாசகங்களே காட்டும். "இசைப்பொருள் பற்றியும் சரித்திரப் பொருள்கள் பற்றியும் இக்காவியம் தமிழ்மக்களிடம் பரவி வந்ததேயன்றி, இதன் கதைச் சிறப்பும், கவிதைச் சிறப்பும், பிற இலக்கியச் சுவைகளும் பெரும்பாலும் பொதுப்பட அறியப்படாமலே கழிந்தன" அவர் சிலப்பதிகார இலக்கிய ஆர்வத்தையும் அதற்கு அவர் தரும் உயர்மதிப்பீட்டையும் நாம் இதில் காண்கிறோம்.

திரு. ஆர். கே. சண்முகமும் சிலம்பும்

போற்றும் சிலருக்கும் திரு. வையாபுரிக்கும் உள்ள வேறுபாடு, அவர் போற்றுவதால் வந்ததன்று. போற்றும் வகையாலேயே வந்தது என்பதை இது காட்டுகிறது.

இனி, ஆர்வமற்ற, ஆனால் வெறுப்பற்ற பாராட்டுக்குரிய ஆர். கே. சண்முகத்தின் போற்றுதல் எத்தகையதெனக் காண்போம்.

"உலகில் பலமொழிகளில் தோன்றிய சிறந்த பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்றல்லவா என்று அறிந்து மகிழ்ந்தேன். நம் தமிழ் முன்னோர் நமக்குத் தந்த இப்பெருஞ் செல்வத்தை இத்தனை காலம் அறியாமலும் அனுபவிக்காமலும் இருந்து விட்டோமே என்று துக்கப்பட்டேன்" என்று அவர் தம் முன்னுரையில் குறிக்கிறார்.

திரு. ஆர். கே. எஸ்ஸும் திரு. வையாபுரியைப் போலவே சிலம்பைப் போற்றுபவர்தான். ஆயினும் போற்றும் சிலர் என்ற ஏளனத்திற்கு உரியவர் அல்லர் அவர் என்பது தெளிவு. அவர் முகவுரையே இந்தப் பின்னணிக் கருத்தை விளக்குகிறது. "உங்களுக்குக்கூடத் தாய்மொழியின் மீது இவ்வளவு ஊக்கம் பிறந்து விட்டதா" என்று பல நண்பர்கள் என்னைப் பாராட்டினார்கள் என்கிறார் அவர்.

திரு. ஆர். கே. எஸ். பிற தமாழி கற்று உயர்வு பெற்றவர். வெள்ளையர் ஆட்சியில் கிட்டத்தட்ட இந்தியாவிலுள்ள ஒரு வெள்ளையராக இருந்தார். "தமிழிலும் உண்டு' என்ற உணர்ச்சியுடனேயே அவர் சிலம்பில் ஈடுபட்டார். சிலம்புக்கும் சிலம்பில் ஈடுபட்டவர்க்கும் இது பெருமை தந்திருந்தது என்பதில் ஐயமில்லை.

திரு. ஆர். கே. எஸ். சிலம்பில் காட்டிய பற்று தமிழில் கொண்ட பற்று, மதிப்பினால் அல்ல. நேர்மாறாக, சிலம்பில் கொண்ட பற்றே அவரைத் தமிழியக்கம் திருப்பிற்று என்று கூறலாம். ஆனால் சிலம்பில் அவர் ஈடுபட்ட பின்னும் அவர் தமிழ்ப்பற்று எத்தகையது என்பதைச் சுட்டிக் காட்டிய ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

பொங்கல் வாழ்த்துக்கள்

தி. மு. க. தலைவர்கள் :

நெடுஞ்செழியன்

கலைஞர் மு. கருணாநிதி

கண்ணதாசன்

ஆகியோரின் கைப்பட எழுதித் தயாரிக்கப்பட்டுள்ள பொங்கல் வாழ்த்துக்கள் விற்பனைக்குத் தயார்.

இரண்டு கலர் கவருடன் ஒரு வாழ்த்தின் விலை அணா 4.

கழிவு 25 சத வீதம். ரூபாய் ஐந்துக்குக் குறையாத ஆர்டர் கோடுப்போருக்கு 50 சத வீதம் கழிவு.

தமிழ்நூல் கழகம்,

2, மெமோரியல் ஹால் தெரு, பி. டி., சென்னை - 3.

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

இமைப்பதற்குள் வனஜாவின் கன்னத்தை நன்றாகக் கடித்து விட்டான் சங்கரன். வெறி பிடித்த நிலையில் அவன் இருந்தான். உடனே நாலைந்து வார்டர்கள் ஓடி வந்து சங்கரனைப் பிடித்துக் கொண்டார்கள். அவனிடமிருந்து வனஜாவை விடுவிக்க அவர்கள் பட்டபாடு பெரும்பாடாய்ப் போய்விட்டது. வனஜா பயந்து நடுங்கி ஒரு பக்கத்தில் போய் நின்றுகொண்டாள். வார்டர்கள் சங்கரனைக் கழுத்தில் அடித்து உள்ளே தள்ளினார்கள். பாலன் இந்த நாடகத்தில் மனம் செலுத்த முடியாமலிருந்தான். இந்திராவின் மரணச் செய்தி, தன் தலையில் விழுந்த பேரிடியாகத் தோன்றிற்று அவனுக்கு. அம்பிகாவுக்கு அந்தக் கவலை இருந்தாலும், 'வனஜா நாடக'த்தைப் புரிந்து கொள்ள முடியாத குழப்ப உணர்ச்சிக்கும் ஆட்பட்டாள். பிறகு நால்வரும் வனஜாவின் காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். வழி நெடுக வனஜா அந்தக் கைதியின் செயல்பற்றிக் கடிந்து பேசிக் கொண்டு வந்தாள். தனக்கும் அந்தக் கைதிக்கும் சிறிதுகூட உறவில்லை என்பதைக் காட்டிக் கொள்வதே அவளது நோக்கமாயிருந்தது. 'என் பெயர் அவனுக்கு எப்படித் தெரிந்தது' என்று வாய் விட்டுச் சொல்லி ஆச்சரியப்பட்டாள். கூட கினஜாவும் சேர்ந்து கொண்டாள். அருகிலிருந்த பாலனுக்கு முழுக்கதையும் தெரியுமென்பது அவர்களுக்குத் தெரியாது.

" உன் மாதிரி யாராவது அவனுக்கு உறவினர்கள் இருந்திருக்கக் கூடும் " என்று தத்துவ ரீதியில் கடையை விரித்தாள் கினஜா. ஆமாம் போட்டாள் அம்பிகா பாலன் சிலையாகிப் போயிருந்தான். கார் வனஜா வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

வந்ததும் வராததுமாக அன்றிரவே ஊருக்குப் புறப்பட வேண்டுமென்று பாலன் துடித்தான். அம்பிகா அவனுக்கு ஆறுதல் கூறி, 'நாளை போகலாமே' என்றாள். பாலன் ஒரு விநாடிகூடச் சென்னையில் தங்குவதற்குத் தயாராயில்லை. இந்திராவின் உடல் எரிக்கப்பட்டிருக்குமென்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் அவளது சாம்பலையாவது கண்டுவிட அவன் மனம் துடித்தது. வனஜாவும் கினஜாவும் அவனுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்தார்கள். அன்றிரவே மணி ஒன்பது நாற்பதுக்கு தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் புறப்பட்டான் பாலன். அவனை வழியனுப்பி வைத்த அம்பிகா, உயிரைப் பிரிந்தவள்போல் உணர்ச்சியற்று நடமாடினாள். அன்று இரவுமுழுவதும் அவள் தூங்கவே இல்லை. ஏமாற்றிக் கட்டப்பட்ட ஒரு பெண்ணின்மீது பாலன் ஏற்படுத்திக் கொண்ட அன்பு அவளது ரத்த நாளங்களில் எவ்வளவு கலந்துவிட்டது! இவ்வளவு அன்பும் இனி நமக்குக் கிடைக்குமானால் இத்தனை நாள் பட்ட துன்பத்திற்கும் பலன் கிடைத்தது போலாகிவிடும்" என்று எண்ணமிட்டாள் அம்பிகா. வனஜாவும் கினஜாவும் அவளோடு வெகு நேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். நான்கு பெண்கள் ஒன்றாகக் கூடிவிட்டால் தங்களுக்குள் பலவித ரகசியங்களையும் பரிமாறிக் கொள்வார்கள். அதைக் கேட்கும் வாய்ப்பு ஒரு ஆடவனுக்குக் கிடைத்துவிட்டால் அவர்களைத் தூக்கிக் கொண்டே போய்விடுவான். நல்ல வேளையாக அவர்கள் பேசிக்கொண்ட இடத்தில் ஆடவர்கள் இல்லை. இரவு ஒரு மணிக்குத்தான் எல்லோரும் படுத்தார்கள். வனஜாவும் கினஜாவும் தனித்தனி அறையில் படுத்து உறங்கினார்கள். வனஜா தன்னுடைய அறையை அம்பிகாவுக்குக் கொடுத்தாள். சுமார் மூன்று மணி இருக்கும். அம்பிகாவின் அறைக்குள் ஜன்னல் வழியே ஒருவன் குதித்தான். அம்பிகாவின் வாயில் துணியை அடைத்தான். அந்த இருளில் யாரும் யாரையும் அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை.

12

" அடி பாதகி, என்னை மோசம் செய்தாயே உன்னை விடமாட்டேன் " என்ற வார்த்தைகள் மட்டும் அம்பிகாவின் காதுகளுக்குக் கேட்டன!

அத்தியாயம் 8

மீட்சிப் படலம்

> சென்றதினி மீளாது மூடரே
> நீர்
> சென்றதையே எந்நாளும்
> சிந்தைசெய்து
> கொன்றழிக்கும் கவலை
> யெனும் குழியில்
> வீழ்ந்து குமையாதீர்......
> —பாரதி

காலை பதினொரு மணிக்கு மேலைச் சிவபுரி வந்து சேர்ந்தான் பாலன். ஊருக்குள் வர வர அவன் மனது படபடவென அடித்துக்கொண்டது. சவக்களை தட்டிய முகத்தோடு வீட்டருகில் வந்தான். இழவு வீட்டின் பயங்கர அமைதி அங்கே குடிகொண்டிருந்தது. பாலன் நடைப்பிணமாக உள்ளே புகுந்தான். முன் கட்டிலே இருந்த சொக்கப்பரும் சின்னப்பரும் எதுவும் சொல்லாமல் அழ ஆரம்பித்தார்கள். பாலனும் அழ ஆரம்பித்தான். உள்ளே இருந்து சுந்தரம் ஓடி வந்தான். பாலனுக்கு ஆறுதல் கூற முயன்றான். " இறக்கும் போதுகூட உன் பெயரைச் சொல்லிக் கொண்டுதான் இறந்தாள் " என்றார் சொக்கப்பர். "கருமம் செய்யத்தான் உனக்குக் கொடுத்து வைக்கவில்லை" என்றார் சின்னப்பர்.

திடீரென்று "அத்தான்" என்று ஒரு குரல் கேட்டது. பாலன் திரும்பிப் பார்த்தான். வாடிவதங்கிய இந்திரா நின்றுகொண்டிருந்தாள். பாலனால் நம்பமுடியவில்லை. நடந்த கதை ஒன்றும் புரியாத நிலையில் 'இந்திரா' என்று ஓடிப்போய் இந்திராவைக் கட்டிக் கொண்டான். பெற்றவர்களுக்கு முன்பு கணவனும் மனைவியும் கட்டிப் பிடித்துக் கொள்வது தமிழர் பண்பல்ல. ஆனாலும், மறைந்து விட்டாள் என்று கருதப்பட்ட மனைவியை கண் முன்னால் காணுகிற கணவன், இடம், பொருள் பார்ப்பதில்லை. கண்ணீரும் கம்பலையுமாக இந்திராவின் தலையைக் கோதிக் கொடுத்தான் பாலன். இறந்தது யார் என்று தன்னையறியாமலே கேட்டான். "அத்தை, அத்தை" என்று குளறினாள் இந்திரா. " அம்மா " என்று கதறினான் பாலன், கன்று பசுவைத் தேடிக் கதறுவதுபோல. ஒருபுறம் மகிழ்ச்சி, மறுபுறம் வேதனை. உடலை வேதனைப் படுத்துவது இந்தக் கிடுக்கித் தாக்குதல்தான். தனி மகிழ்ச்சி, மனிதனை மலரவைக்கும். தனி வேதனை மனிதனைக் கருக வைக்கும். மகிழ்ச்சி கலந்த வேதனை ஆஸ்த்மா வியாதியைப் போன்றது. சாகவும் விடாது; வாழவும் விடாது.

சிறிது நேரத்தில் எல்லோரும் அழுது ஓய்ந்தார்கள். பாலன் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். சுந்தரமும் அருகில் வந்து அமர்ந்தான். பாலனுக்கு இப்போது அம்பிகாவின்மீது ஆத்திரம் பிறந்தது. இந்திரா இறந்து விட்டதாகப் பொய் சொன்னாள். எவ்வளவு கல்மனம் படைத்தவள்! நமக்காகவே வாழ்வது போலல்லவா பாவனை காட்டினாள்—என்றெல்லாம் எண்ணி எண்ணிப் பொருமினான் பாலன்.

" இந்திரா இறந்துவிட்டதாக அம்பிகா கூறினாள். பதறிப் போய் ஓடி வந்தேன்" என்றான் பாலன் சுந்தரத்திடம். சுந்தரத்திற்கும் அது சுருக்கென்று தைத்தது.

"அம்பிகா ஏன் பொய் சொல்ல வேண்டும்? சரிதான். பெண்களின் இருதயம் அவர்களது வார்த்தையிலே இல்லை. அது ஒரு தனி உலகம். சந்திர மண்டலத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளுக்குக் கூட எட்டாத உலகம். நமக்கெங்கே தெரியப் போகிறது! ரயிலில் போகும்போது அவள் நடத்தியதெல்லாம் நாடகமாகக் கூட இருக்க முடியும்" என்று எண்ணமிட்டான் சுந்தரம்.

"எப்படி நீ விடுதலையானாய்?" என்று பாலனைக் கேட்டான் சுந்தரம். நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தான் பாலன். ஒரு நல்ல தைச் செய்து ஒரு தீய வார்த் தையையும் போட்டு வைத்திருக் கிருள் அம்பிகா. என்ன வேடிக்கை! இப்படி நினைத்த போது சுந்தரத்தின் மனதுக் குள்ளேயே ஒரு சிரிப்புத் தோன் றிற்று. அவர்கள் பேச்சிலே சின்னப்பரும் சொக்கப்பரும் வந்து கலந்து கொண்டார்கள். இந்திரா ஒரு மூலையில் வந்து உட்கார்ந்தபடி அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள். பாலன் அடிக்கடி அவளைப் பார்த்து மனதுக்குள்ளேயே ரசித்துக் கொண்டான். பகல் உணவைக்கூட அந்த பலவீன நிலைமையிலும் இந்திரா மாடிக்கு எடுத்துக்கொண்டு சென்ருள். பாலனுக்குத் தனியாக தன் கையாலேயே பரிமாறினுள். பாலன் அதைச் சாப்பிடவில்லை. "சாப்பிடுங்கள்" என்ருள் இந்திரா பரிவோடு. அவளை அருகில் இழுத்து, தன் மடியில் சாய்த்துக்கொண்டு, "நீ சாப் பிட்டு விட்டாயா" என்று மெது வாகக் கேட்டான் பாலன். தன் வலது கன்னம் அவனது மார்பில் பட சாய்ந்துகொண்டு 'இல்லை' என்ருள் இந்திரா. தன் நோய் முழுக்கக் குணமாகிவிட்டதாக இந்திராவுக்கு ஒரு மயக்கம். ஒரு பிடி சோறு எடுத்து அவ ளுக்கூட்டப்போனுன் பாலன். தடுத்த இந்திரா 'நீங்கள்?'— என்று கேட்டாள். பாதியைத் தன் வாயில் போட்டுக்கொண்டு பாதியை அவளுக்கு ஊட்டினுன் பாலன். "கொஞ்சம் பொறுக் கக்கூடாதா?" வாயிலிருந்த சோற்ருேடு இந்திராவை முத்த மிட்டான் பாலன். இந்திரா அந்தச் சுவையையும் சேர்த்து உண்டாள். மறுகவளம் எடுக்க வில்லை பாலன். பசி அடங்கிவிட் டது. கையைக் கழுவாமலேயே வேட்டியில் துடைத்துக் கொண் டான். கை கழுவுகிற நேரத்தில் அவளைப் பிரிந்திருக்க வேண் டுமே, அந்த அரவணைப்பை இழந்திருக்க வேண்டுமே!— அதற்காகவே அவன் எழவில்லை. இந்திரா அவன் உதட்டில் ஒட்டி யிருந்த உணவுச் சிதறலை மெது வாகத் துடைத்தாள். பாலன் கேட்டான்: "ஆண்கள் தாங்க ளாகவே போய் மனைவியருக்கு முத்தம் கொடுக்கிருர்கள். மனை வியரும் இணங்கிக் கொடுக்கி ருர்கள். ஆனல் அவர்களாகவே வந்து முத்தம் கொடுத்தால் எவ் வளவு மகிழ்ச்சிக் குரியதாகவே இருக்கும்". இந்திராவுக்கு இந்த வார்த்தைகளைப் புரிந்துகொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை. சிரித்துக்கொண்டே தலையைத் தூக்கினுள்......—அடடா! உலை கொதிப்பதைக் கண்டு எஞ்சின் கண்டுபிடித்த விஞ்ஞானிபோல் பெண்களின் முத்தத்தைக் கண்டுதான் தபாலாபீஸ் முத் திரை கண்டு பிடித்தார்கள் போலிருக்கிறது—பாலன் இப் படிச் சொல்லவில்லை. அந்த நேரத்தில் உவமை எங்கிருந்து வரும்' கவிஞர்கள் எழுதிவைத்த உவமையெல்லாம் கற்பனையில் தோன்றியது. அனுபவ நேரத் தில் உவமையும் வராது, ஆராய வும் தோன்ருது.

மறுபடியும், 'சாப்பிடுங்கள்' என்ருள் இந்திரா.

'பசியில்லை' என்று கூறிய பாலன் அவள் அங்குமிங்கும் விலக முடியாதபடி கட்டுப் படுத்தி வைத்துக் கொண்டான்.

பிரம்மசாரியாய் இருப்பதிலே தொல்லை இல்லை. ஆனல் கண வனுய் இருப்பவன் சில நேரங் களில் மனைவியிடம் அடையும் மகிழ்ச்சியை பிரம்மசாரி கற் பனை செய்துகூடப் பார்க்க முடி யாது. அந்த நேரத்தில், "உல கத்தில் துன்பமே இல்லை"— என்கிற எண்ணம் பாலனுக்குத் தோன்றிற்று. தன்மீது சுமத்தப் பட்டிருக்கும் வழக்கின் நினைவு அப்போது அவனுக்கு வரவே இல்லை.

"கேட்க மறந்துவிட்டேனே; உனக்கு உடம்புக்கு என்ன?" என்று கேட்டான் பாலன். அவ ளைப் பார்த்தபிறகு அதைக் கேட்கும் நினைப்பே அவனுக்கு வராமலிருந்தது.

"ஒன்றுமில்லையே!" என்று பொய் சொன்னுள் இந்திரா.

தியாகத்திற்கு உருவங்கள் பல இருக்கலாம். ஆனல் அது பிறந்த இடம் என்னவோ பெண் ணின் இதயம்தான். தான் நோயுற்றிருப்பதாகச் சொன்னுல் கணவனது எண்ணங்களுக்குத் தாழிடப்பட்டுவிடுமோ என்ற பயத்திலேயே அவள் பொய் சொன்னுள். பாலன் அதை நம்ப வில்லை. "சும்மா சொல்லுடா கண்ணு" என்று முகத்தோடு முகம் சேர்த்துக் கேட்டான் பாலன்.

மனைவியை 'அடா' என்று கணவனும், கணவனை 'அம்மா' என்று மனைவியும் பால் மாற்றி அழைப்பதுதான் காதற் கதை யின் சுவையான பகுதி. எப்படிக் கேட்டும் தன் உடம்புக்கு ஒன்று மில்லையென்றே சாதித்தாள் இந்திரா. பொழுது சென்று கொண்டிருந்தது. அந்தக் காதற் புருக்கள் ஒன்றையொன்று வட்ட மிட்டுக் கொண்டிருந்தன. வெளி உலகம் ஒன்றிருப்பது அவர் களுக்குத் தெரியவில்லை. மாலை ஐந்து மணி சுமாருக்கு அவர் களிருந்த அறைக் கதவு தட்டப் பட்டது. தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு ஓடிப்போய் கதவைத் திறந்தாள் இந்திரா. அப்போது ஒரு புதிய தெம்பு அவள் உடலில் பாய்ந்திருந்தது. கதவுக்கு அந் தப் பக்கம் கையில் இரண்டு கோப்பை காப்பியை வைத்துக் கொண்டு நின்ருள் கமலம். இந்திரா அதை வாங்கிக் கொண்டு கதவைச் சாத்தினுள். கமலத்தைத் தன் கணவன் பார்த்துவிடக் கூடாதென்பதற் காகவே அவசரமாகக் கதவைச் சாத்தினுள். தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை அவ ளுக்கு. கமலத்தைப் பார்த்துவிட் டால் கணவனுக்கும் தனக்கும் அந்த நேரமிருக்கும் ஒருமை உணர்ச்சி குறைந்துவிடுமோ என்ற பயம். கமலமும் அதை உணர்ந்து 'விடு விடு' என்று கீழே இறங்கிப் போய்விட்டாள். திரும்பிய இந்திரா அங்கே ஒரு வேடிக்கையைக் கண்டாள். அவள் மனம் பூரித்தது. கணவன் மீதுள்ள பாசம் பெருகி வளர்ந் தது. பாலன் நெருப்புக்கோழி போல் தலையணைக்குள் முகத் தைப் புதைத்துக் கொண்டிருந் தான். 'நீ தாழிடுவதென்ன? நானே அவளைப் பார்க்கமாட் டேன்" என்று சொல்வதுபோலி ருந்தது அது. இந்திரா 'காபி' என்ருள். கோப்பையை வாங் கிக் கீழே வைத்துவிட்டு மீண் டும் அவளை அருகே உட்கார வைத்துக் கொண்டான் பாலன். இரண்டு குழந்தைகள் பிறந்து குடும்ப வாழ்க்கை கடமையாக மாறுகிறவரை கணவனுக்குக் காதல் சலிப்பதில்லை; சாப்பாடு பிடிப்பதில்லை. இந்திரா படித்த வளல்ல. ஆனுலும், இந்தத் தத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியாதவளல்ல! அவனுடைய விருப்பத்தைச் சிறிதுகூட அவள் தட்டி நடக்கவில்லை.

அன்று இரவு இந்திராவை அழைத்துக்கொண்டு சினிமா வுக்குப் போவதென்று தீர் மானித்தான் பாலன். கணவ னிடத்தில் முழு நம்பிக்கை கொண்டுவிட்ட இந்திரா, தங்கை யின் மீதுள்ள அன்பால் 'அவளை யும் அழைத்துப் போகலாமே' என்ருள். பாலன் சம்மதித்தான்.

மேலச் சிவபுரியில் ஒரே ஒரு சினிமாக் கொட்டகை உண்டு. அதில் அப்போது ஒரு பழைய குடும்பப்படம் நடந்து கொண் டிருந்தது. பாலன், இந்திரா, கமலம் மூன்று பேரும் முதல் வகுப்பு ஆசனங்களில் வந்து அமர்ந்தார்கள். படம் இரண்டு சுருள் ஓடிய பிறகு பாலன் எழுந்து வெளியே சென்ருன். சிறிது நேரத்திற்குப் பிறகு வந்து அமர்ந்தான். இந்திராவுக்குச் சுருக்கென்று தைத்தது. அவன் அப்போது கமலத்தினருகில் உட்கார்ந்திருந்தான். படம் ஓடிக் கொண்டிருந்தது.



பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி

பதில் தருகிறார்

சி. பெருங்கோ,
பாளையங்கோட்டை.

1. 'அந்தணர், அறவோர், பெண்டிர், மூத்தோர் ஆகிய இவர்களை நீக்கி ஏனைய தீத்திறத்தோர் பக்கம் சார்க' என்று கண்ணகி மூலம் இளங்கோவடிகள் தீயை ஏவி மதுரையை எரிக்கின்றார். இச்சிலரை நீக்கி ஏனையோரை எரித்தது நேர்மையா? இவர்களைத் தவிர ஏனையோர் அனைவரும் தீயோராகுவரா? இவ்வாறு இளங்கோ கூறுவது சரியா?

2. மருத்துவக் கல்லூரியில் பயின்ற பெண்டிர் உடலை வெட்டிப் பார்க்கின்றனர். எந்த இரத்த உடலையும் கண்டு அஞ்சுவதில்லை. சூழ்நிலையால் மனவலிவு பெற்று விடுகின்றனர். எனவே குருதி காணமுடியாத மெல்லியலார் என்று நாம் பெண்டிரைக் குறிப்பது தகுமா? இரக்கம், கற்புநெறி என்பனவெல்லாம் சூழலால் ஏற்படுகிறது என்றும் இயல்பாக அமையவில்லை என்னும் தோன்றுகிறது. தங்களது கருத்தென்ன?

1. ஏனைய தீத்திறத்தோர் என்பது ஏனைய எல்லாரும் தீத்திறத்தவர் என்ற பொருள் கொண்டதல்ல: ஏனையவருள் தீத்திறத்தார் என்பதே பொருள். எல்லாத் தீமைகளுக்கும் அரசன் பொறுப்பாளி. குடியாட்சி முறைப்படி அரசன் மக்கள் அனைவரின் பேராள். ஆயினும் சீற்றத்திலும் கண்ணகி தீயோர்மீது மட்டுமே ஏவுகிறாள். கூறுவது இளங்கோவானாலும் கூற்று கண்ணகி வாய்மொழியாகும்.

2. பெண்டிரின் மெல்லியல்பு, உள்ளக்கனிவு ஆகியவை தாய்மை சார்ந்தது. அது இருபாலார்க்கும் பொது அல்ல. குருதிகண்ட பழக்கம்கூட பெண்டிர் மட்டுமே அறிகின்ற இத்தாய்மை உணர்ச்சியை முற்றிலும் மாற்றாது பெண்டிடையே வீரர் உண்டு அருகலாக. வீர உணர்ச்சி பெரும்பாலும் வீரத்தாய் உணர்ச்சியாய் விடும். ஆண்களிலும் மெல்லியல்புடையவர் உண்டு. இதுசிறுபான்மை. கலைஞர் இத்தகையர்.

◉

கோளத் தென்றல்—தாரமங்கலம்
(மலையாளக் கேள்வி)

1. சகுனம் என்னு பறையுன்னத நல்ல தமிழா அல்லது வடமொழியா என்னு அறியிக்குக.

2. பழைய காலத்து திராவிடம் எங்ஙனம் தமிழ் மொழியாணு பறஞ்ஞு வந்தது என்னு பறந்நதுண்டல்லே? அங்ஙினெயாணெங்கில் அதினுதகுந்த விவரம் உதாரணத்தோடே அறியிக்குக.

1. சகுனம் என்பது சமஸ்கிருதச் சொல் அதன் பொருள் பறவை என்பது. அதற்குரிய தமிழ்ப் பெயர் உன்னம் என்பது. இதுவும் பறவையே. அப்பறவையை நோக்கியே தமிழ்க் குறிகாரரும் குறி கூறினர். சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தமிழரிடையே இப்பழக்கம் உண்டென்பதைக் காட்டுகிறது.

சகுனம் என்ற சமஸ்கிருதச் சொல் ஆரியச் சொல் என்று தோற்றவில்லை. இந்தியாவுக்கு வெளியிலுள்ள ஆரிய மொழிகளில் அச்சொல் இருப்பதாகத் தெரியவில்லை, சொல்லையும் வழக்கத்தையும் ஆரியர் திராவிடரிடமிருந்து பிழைப்புக்காக மேற்கொண்டிருக்கலாம்.

2. திருவிதாங்கூரிலே சுமார் கி. பி. 1840 வரை தமிழே பள்ளிக்கூட மொழியாகவும் அரசியல், நீதிமன்ற மொழியாகவும் இருந்து வந்தது. இதற்கு ஆதாரங்கள் ஏராளம். அரசியல் பதிவு ஏடுகளே (பத்திரங்களே) சான்று பகரும். தவிர மலையாள நாட்டில் எல்லாப் பழங் கல்வெட்டுக்களும் தமிழர்களே இருக்கின்றன. உண்மையில் தமிழில் அச்சடித்த முதல் புத்தகம் கள்ளிக்கோட்டையில் தமிழ் அச்சகத்தில் பதிப்பித்த பெப்ரீஷியஸ் அகரவரிசையேயாகும். தமிழின் முதல் கல்வெட்டுக்கள்கூட மலையாள நாட்டில் கி. பி. 2-ம் நூற்றுண்டில் யூதர்களுக்கும் சிரிய கிறிஸ்தவர்களுக்கும் சேரமன்னன் பாஸ்கர ரவி எழுதிக் கொடுத்த செப்புப் பட்டயங்களே யாகும்.

தெலுங்கு கன்னட நாடுகளில் சான்றுகள் இதனினும் சற்றுக் குறைவு. ஏனென்றால், அவை தமிழகத்தினின்று முற்பட்ட காலத்திலேயே பிரிந்தன. ஆனால் அங்கும் கல்வெட்டுக்களில் சமஸ்கிருத எழுத்துக்கள் கிடையாது. தமிழ் சிறப்பு எழுத்துக்களான ற, ழ, உண்டு. மொழி நடையிலும் இன்று தெலுங்கு கன்னட மொழிகளில் வழங்காத தமிழ்ச்சொற்கள் மிகுதி இன்றைத் தெலுங்கரும் கன்னடியரும் அதைப் பழந் தெலுங்கென்றும் பழங் கன்னடமென்றும் கூறுவர். அது உண்மையில் தமிழிலிருந்து ஒரு சிறிதே வேற்றுமைப் பட்ட கொடுந் தமிழாகும். தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களுடன் ஒப்பிட்டால் வேற்றுமை இன்னும் குறைவு.

திருக்குறள் புது உரை...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

நாகரிகத்திற்கு, சமயத்திற்குச் செய்த, அல்லது நேர்ந்த அவமே என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. பரிமேலழகர், இவ் அவத்தையை இனிமேல் எவ்வாறு நீக்குதல் கூடும். இந்நாள் உள்ள தமிழனே அதைப் போக்க எழல் வேண்டும்.

17. உரையாசிரியரின், கொள்கைப்படி இன்னொரு கூற்று இறுதியாக உள்ளது. அதனை இங்கு ஆராய்ப் புகுவோம். பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் முதலிய நிலைகளை 'அறவொழுக்கம்' என்றார். வள்ளுவர் கருத்து இஃதாமா வென்பதைக் கணக்கிடுவோம்.

18 வள்ளுவருக்கு 'ஒழுக்கம்' உயிரினும் ஓம்பப்படும் பொருள். 'ஒழுக்கமுடைமை குடிமை' யென்றும் இழுக்கம் "இழிந்த பிறப்பு" என்றும் கொண்டனர்: 'குடிமை' என்பதற்குத் தனி அதிகாரம் வகுத்து அதற்குரிய பண்புகள் இன்னின்னவென்று காட்டியுளார். அப்பண்புகளில் இவ்வாசிரம நிலை இடம்பெறவில்லை. சுருக்கமாகச் சொல்லின் "நகை ஈகை இன்சொல், இகழாமை நான்கும் வகையென்ப வாய்மைக்குடிக்கு" வள்ளுவர் சொல்லும் பண்புகளெல்லாம் ஒருவனின் குலம் பற்றியும் பிறந்த குடிபற்றியும் நிகழ்வன. ஒருவன் தான் கற்றகல்வியை மறந்தாலும் அதை மறுபடியும் ஒதிப்பெற முடியும்; ஆனால் உயர்குடிப் பிறந்த ஒருவன் தன் குலவொழுக்கத்தை நழுவவிடுவானேயாகில் அவனது பிறப்பு இழிந்த பிறப்பாய்விடும் என்று காட்டினர் வள்ளுவர்; இழிந்த பிறப்பென்றது பரிமேலழகர் கருத்துப்படி தாழ்ந்த வருணமன்று; மனிதப் பிறவியிலும் இழிவாகிய விலங்கினமேயாகும். அது பற்றித்தான்,

"விலங்கொடு மக்க ளனையர்
இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்"

என்று எழுப்பினார். கல்வியில்லாமைக்கே மக்களை விலங்கனையர் என வள்ளுவர் கூறினரெனின், கல்வியினும் ஒழுக்கமே சிறந்தது எனக் கொண்டவர் ஒழுக்கத்தினின்றும் இழிந்தவரை, விலங்கனையர் என்று ஓதாது, விலங்கே யெனக் கொண்டுளார் என்பது தெளியலாம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றதை இத்துடன் கூட்டிப்பார்க்கின் திருவள்ளுவரின் கருத்து நன்கு புலப்படும், 'எல்லாவுயிர்க்கும்' என்றார். 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்,' எல்லா மக்களுக்கும் வேண்டப்படுவதென்று வள்ளுவர் எண்ணினரா? அல்லது ஆசிரம நிலை வகுத்து அதனால் வரும் நல்லொழுக்கம் பிராமணனோடு நின்றுவிட எண்ணினரா? கொல்லாமை, புலான்மறுத்தல் முதலிய கடமைகளை வகுத்துள்ள இல்லறத்தானை அவ்வழி நில்லா ஆரியக் கிரகஸ்தனை நல்லொழுக்கமுள்ளவன் என்று கருத இடமில்லை. வள்ளுவர் போதிக்கும் அறவொழுக்கமெல்லாம் முதலில் தொல்குலத்தின், தொல்குடியின் வழியாக எழுவன. ஆசிரம நிலையோ அவ்வாறல்ல; ஆரியவினத்தைச் சேர்ந்த பிராமண வருணம், மேலுலகஞ் செல்லுவதற்குத் தாங்களே வகுத்த படியேயன்றி வேறல்ல. ஆகவே பிராமணரின் ஆசிரமநிலை இயல்புடையதுமல்ல; அறிவியல்புடையது. அறவொழுக்கமுடையது மன்று என்ற வள்ளுவர் கருத்தாமாகும்.

19. இன்னுஞ் சிந்திப்போம். வள்ளுவர் வழிப்படி, பிறர் நோயை, இடுக்கணை, வறுமையை நீக்கும் வழி நிற்பதே அறமாகும்; ஆசிரம நிலை இவ்வழி நிற்கிறதா? தன்னலத்தையே, பெருமையையே கோருகின்றதே யொழிய வேறெவர்க்கு நன்மை பயக்கின்றது. 'பிறர் நலம் பேணு' என்பது தமிழர் வழக்கு; கையாண்ட முறை; ஆசிரம நிலையோ தன்னலம் பேணு முறையை ஆதரிக்கின்றது, ஆகவே, அதை வள்ளுவர் போற்றுவரென்று கொள்ள இடமுண்டோ? வள்ளுவர் ஒழுக்கம் அன்பின் வழியது; 'அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு' ஆசிரம நிலை இவ்வழியா? இல்லை! இல்லை!

20. தமிழர்களே! பரிமேலழகர் எழுப்பின கருத்துக்களை நன்கு ஆராய்ந்து பார்க்கின்ற அளவில், அழகர் மதிமயங்கிப் பிறழ்ந்தார் என்றே கருதுகிறேன்: அவர் காலத்து நாட்டின் நிலையையும் கல்வி நிலையையும், தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையையும் வாயிலாகக் கொண்டு பார்க்குமளவில், அக்காலத்தை யொட்டி பிழையெனக் கொள்ளலாம்; எனினும் பிழை பெரும்பிழையே; என்னையெனின் எழுந்த பிழை அவருடன் நின்றுவிடவில்லை; அது தமிழகத்திற்கே இழைத்த பிழையாகிவிட்டது. தமிழ் நாடு தன் சிறப்பு இழந்து அடிமைப் பட்டது; நாடு இழிந்தது; தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம் யாவும் சிதைவுற்று மறைந்தன; தமிழர் பண்பு, சமயம், வாழ்க்கை யாவும் நிலை குலைந்தன; அன்னியர் நாகரிகம், கொள்கை, சமயம் முதலியன மேலோங்கின; அவரின் ஒழுக்கம் உயர்ந்தது; நாட்டின் செல்வம் தேய்ந்தது; வளங்குன்றியது; உழவின் உயர்வு உடைந்தது; தமிழரசு தாழ்ந்தது; வாணிபம் வீணுயிற்று; வறுமை மலிந்தது; வேற்றுமை வளர்ந்து நிலைத்தது; பிறப்பினால் உயர்வு தாழ்வென்ற இருள் சூழ்ந்தது; குலமும் ஒன்றே என்ற பண்டை நாட்டுக் கொள்கை மாய்ந்தது; ஒற்றுமை நீங்கிற்று; அன்னியன் தெய்வமாயினன். இக்கொடிய வேறுபாடுகளால் திராவிடநாடு: திரையிட நாடு, அல்லல்பட்டுத் துயருறுகின்றது. துயரின் வேகம், கொடுமை, தாங்குவதற்கரிது; நற்காலம் என்று எழுமோ தெரியவில்லை; நாட்டில் இந்நாள் நடக்கும் நிகழ்ச்சிகள் நற்குறி எழுப்பவில்லை.

21. தமிழ் நேயர்களே! ஆதலால் சீரும் சிறப்பும் பெற்று, உலக நாகரிகத்திற்கே, பல்லாயிரம் ஆண்டிற்கு முன்னரே வழிகாட்டி, அடிகோலிய மூதாதையர் வழித் தோன்றி, இந்நாள், சிறுமையுற்று, சீரழிந்து, மானமழிந்து, மதி மயங்கி வாழும் தமிழ்த்தம்பிகளே! துயில் களைந்து, மடிநீக்கி மயக்கந் தீர்ந்து எழுங்கள்!

புயல் நிவாரண நிதி சிறப்புக் கூட்டம்

ஆரணி (வட ஆற்காடு) நேஷனல் டாக்கீசில், தி.மு.க. சிறப்புச் சொற்பொழிவு. 7-1-56 காலையில் 9-மணிக்கு தோழர் போளூர் சுப்ரமணியம் தலைமையில் அறிஞர் அண்ணு, திருவண்ணுமலை ப. உ. சண்முகம் பேசுவார்கள். கட்டண வசூல் புயல் நிவாரணத்துக்கு அளிக்கப்படும்.

கட்டணம் ரூ. 1. — அணு 8.
தாய்மார்களுக்கு 0-4-0.

தி. மு. க.
ஆரணி.

வெண்பாப் போட்டி

21. பெண்ணிற்கும் ஏதேனும் ஒரு பொருளிற்கும் சிலேடை

வெண்பாப் போட்டி 21-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

பூவின் முகங்காட்டிப், போவார் உளங்கவர்ந்து,
தாவியுமே ஆடித், தனியாக-மேவாமல்
மற்றோர் துணைநாடும் வண்முல்லைப் பூங்கொடியும்
நற்றமிழ்ப் பெண்ணும் நிகர்!

—கோ. கலியபெருமாள், சிதம்பரம்.

★

மென்மைக் குணமுண்டு மேதினியில் உள்ளத்தின்
மன்னும் மணமின்றேல் மாண்பில்லை-மன்னவனின்
தண்மார்பில் நின்றொளிரும் தன்மை தனைநோக்கின்
பெண்ணும் மலரெனவே பேசு

—வ. ஆனையப்பன், பரிவில்லிக்கோட்டை.

★

பூக்கும் கனிக்கும் பொலிவொடு நின்றிடும்
ஆக்கந் தரும்பா லளித்திடும்-தூக்குங்கால்
தெங்கிள நீரினுந் தீஞ்சுவைச் சொல்லாளே!
மங்கை நிகர்க்குங்காண் மா.

—கு. வே. இராமகோடி, சென்னை 7.

★

மென்மைத் தளிருடலால் மேல்வளர்ந்து பூத்திடலால்
நன்மை மிகவும் நயந்திடலால்-மென்மழலைப்
பைங்கிள்ளை யெய்தலாற் பார்வை கவர்ந்திடலால்
நங்கன்றின் நேரிணையாம் மாது.

—தி. ந. அருச்சுனன், திமிரி.

★

மொழிந்தமொழி நன்கினிக்கும் முத்துப்பல் மேவும்
கொழுந்தாடை யும்புனையும் கோவே,-செழுங்காவில்
சிங்கார மாய்நிற்கும் சேரும்நா ணற்குணமும்
செங்கரும்பை நங்கையெனச் செப்பு.

—பழ. தனசேகரன், பாகனேரி.

★

சின்ன இதயத்துள் சீராக வீரமுடன்
நன்னெறியும் நன்றே நுழைத்திட்டு-அன்னவரைப்
பிற்கால வீரராய்ப் பேணி வளர்ப்பதனால்
பெற்றவளை ஆசானென் பேன்!

—ஏ. மயிலன், வேலூர்.

★

இன்பத்தேன் நல்தீண்ட இன்புற்றே அன்போடு
துன்பப் புயலிற்கும் தண்டனிட்டு-தன்னை(க்)
காணவிழை வெள்ளக் காதற்கண் பட்டே
நாணலும் நற்பெண்ணே காண்,

—சேகரன், மயிலாப்பூர்.

★

தாமரை யிங்குண்டு; தண்மை யிருப்பதுண்டு;
தாவுங் கயலுண்டு; தார்மார்பில்-மேவாத
அல்லிமொட் டுண்டிரண் டுண்டு கருவண்டு
தெள்ளமுதெ டுக்குந் தெரிந்து!

—சோ. இளங்கோவன், பாகனேரி.

★

நாட்டின் உயிர்நாடி நல்லோர்க்குத் தெள்ளமுதாம்
ஏட்டின் இசைதேடி எக்காலும்-காட்டகத்துப்
பற்றற்று வாழ்வாரும் பார்ப்பின் மயங்கிடுவர்
உற்றிடுபெண் செல்வமென ஓது.

—அ. செல்லப்பன், புதுவை.

★

முத்து வரியிருக்க மூடியதை வைத்திருக்கும்;
பித்தருக்கங் கூறுவதோ நன்மதுவாம்!-நத்தத்தில்,
மன்னுகாய்க் காடவரே ஏறி இறங்குதலால்,
கன்னிக்கு நேர்தென்னை காண்.

—இரா. அன்புரையன், அம்மையப்பன்.

★

தேனருந்தக் காதலனைத் தேடி யழைத்திட்டோர்
தானழிந்தார் வாடித் தரணியிலே-ஆணினமே!
கொய்யாப் புதுமலரும் கோவை இதழ்வடிவும்
பொய்யாகும் என்றே புலம்பு.

—'முருகு'-சுப்பு, பெரமனூர்.

★

என்றுந்தன் தண்ணளியால் யாவரையு மின்புறுத்தித்
தன்கேள்வன் சீற்றம் தணிவித்துப்-பொன்னூர்
முகங்காட்டிக் காதலர் மெய்மறக்கச் செய்யும்
மகளிருடன் ஒப்பாம் மதி.

—"தமிழவேள்" வேலூர்.

★

வட்ட முகத்தால் வளமேனி மாமினுக்கால்
முட்டுந் தனப்பெருக்கால் மூன்றிலொன்றால்-கட்டினவன்
கட்டிப் புரள்வதால் கன்னத்தில் தட்டுவதால்
எட்டிரண்டுடன் பெண்ணே பணம்.

—பெ. இறைமணி, திருவையாறு.

★

தோன்றும் இடம்விட்டு வேறிடமே வாழுதலால்
சான்றே இலாது தாரணியில் ஈன்றிடும்
தங்களரும் சேயர்க்காய் தாமிடுக்கண் தாங்குதலால்
மங்கையே மாவாதல் காண்.

—சு. சுடலையாண்டி, பி. எஸ்சி. செங்கோட்டை.

★

கார்ப்பருவம் வந்துற்ற காலத்தே கண்ணகலக்
கார்த்தலைவன் நல்லன்பைக் காமுறுவர்-பார்த்திடவே
பையத்தஞ் சாயலினை ஐதாகக் காட்டிடுவர்
தையலும் பைந்தோகை யும்.

—அ. க. பாமணி, திருவையாறு.

★

தனமுண்டு தக்ககை பூட்டுண்டு தாங்கும்
கனமுண்டு கைப்பிடியு முண்டு-தினமுந்தான்
தொட்டிழுக்கப் பட்டிடலால் தோகையை நீயிருப்புப்
பெட்டிக்கு நேராகப் பார்.

—ஆரை. நா. கணபதி, நத்தம் கோவில்பட்டி.

★

வண்டேந்தும் பல்இதழும் வாய்குமிழ்நீர் கொண்மூக்குத்
தண்டேந்தும் செந்தொடையாய்த் தண்மாலை-[கொண்டேந்து
செங்கொங்கை மெல்லிடைதான் சேரநட மாடிவரும்
மங்கைநற் செங்கமலப் பூ.

—பொன்னிவளவன், பாவநாசம்.

★

மேகம்மேல் காண்பதுவால் மின்னலிடைத் தோன்றுவதா
தாகத் தணிப்பதுவால் தண்மதியம்-பாகமதால்
மண்ணிறைந்த சோலை மணித்தமிழெம் பொன்னாட்டில்
பெண்ணுவாள் விண்ணென்று பேசு.

—இரா. சோமசுந்தரன், அண்ணாமலைநகர்.

★

வட்ட வடிவழகு வண்ண முகங்கோணி
மட்டார் இதழ்மடித்த மாண்பென்ன?-நட்டகன்றான்
ஏக்கத்தால் வாடும்வெண் டாமரையும் பெண்ணுமிந்
நோக்கத்தால் ஒன்றுக்கு நேர்.

—புரட்சிவேலன், கோத்தகிரி.

★

காப்பால் கவின்பெறலும் காவாக்கால் வாடுதலும்
பூப்பால் மணம்பெறலும் உண்மையே-எப்பொழுதும்
தென்றல் உலவிவரும் தேன்பொதியக் குன்றிடத்தே
மன்றல் பெறும்பெண்ணும் பூ.

—நெல்லைக்கபிலன், சென்னை.

★

முத்துநகை செய்தலால், மூட்டியுலை யூதுதலால்,
கைத்தலத்திற் காஞ்சனம்பெற் றுக்குதலால்-சித்திரம்பே
கன்னித் தமிழ்நாட்டுத் தையலரும் தட்டாரும்
எண்ணித் துணிக இணை.

—"வறுமைச்செல்வன்," மேட்டூர்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எம். எம். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.